


Metro லீடர்
மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'




லீடர்: 04 இதழ்: 279 2024.10.23 பக்கங்கள்:06 editorml21@gmail.com விலை:75/-

# ஏப்ரல் 21 தாக்குதல் கம்மன்பிலவின் அறிக்கையை அரசு ஏற்காது!



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில வெளியிட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த விசாரணை குழு அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று (22) இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட போது அமைச்சர் இதனை தெரிவித்தார்.

02 ⏭

## தரமான அரச சேவைக்கு தம்மை அர்ப்பணிக்குமாறு ஆளுநர்களுக்கு ஜனாதிபதி அநுர அறிவுரை



மாகாண சபை பொறிமுறையை நெறிப்படுத்துவதற்கான பரிந்துரையொன்றைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு மாகாண ஆளுநர்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அறிவித்துள்ளார்.

02 ⏭

## மெட்ரோ லீடர் பிரதம ஆசிரியருக்கு சிறந்த ஊடகவியலாளர் விருது



மெட்ரோ லீடர் பிரதம ஆசிரியராக பணியாற்றி வரும் முஹமட் முஜாஹித் சிறந்த உடகவியலாளர் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார். இலங்கை ஆளுமைகளை கௌரவிக்கும் "ஸ்கை தமிழ் விருது விழா - 2024" கடந்த சனிக்கிழமை ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் இடம் பெற்றது.

02 ⏭

## பொதுத் தேர்தல் -130,000 சுவரொட்டிகள் அகற்றம்

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக சட்டவிரோதமாக காட்சிப்படுத்தப்பட்டிருந்த 1,30,000 சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் அகற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

02 ⏭

## சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையைத் திருத்துவதற்கு நடவடிக்கை



02 ⏭

எதிர்வரும் பொதுத் தேர்தலினூடாக தமது தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு அதிகாரம் கிடைக்கப் பெறுமானால், நாட்டிற்கு நன்மை ஏற்படும் வகையில் சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உறுதியளித்துள்ளார்.



## ஏப்ரல் 21 தாக்குதல்..........

பக்கச்சார்பின்றி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில், அரசாங்கத்தினூடாக புதிய முழுமையான விசாரணை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உதய கம்மன்பிலவின் தேவைக்காக ஷானி அபேசேகர, ரவி செனவிரட்னவை பதவிகளிலிருந்து நீக்க முடியாது எனவும் அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்

## தரமான அரச சேவைக்கு.........

மாகாண சபைகளின் கீழ் உள்ள சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதோடு அதற்குச் சாதகமான தீர்வுகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. தற்போதைய நிலைமாறு காலத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை இலகுபடுத்துவதற்கு மாகாண சபைகளினால் வழங்கக் கூடிய உச்ச சேவையை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (22) நடைபெற்ற மாகாண ஆளுநர்களுடனான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். மக்களின் வாழ்க்கையை இலகுவாக்கும் வகையில் மாகாண சபைகளினால் சாத்தியமான அனைத்து பொருளாதார மற்றும் சமூக தலையீடுகளையும் மேற்கொள்ளுமாறு மாகாண ஆளுநர்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

புதிய அரசியல் கலாசாரமொன்றை ஆரம்பிப்பதற்காகக் கிடைத்துள்ள மக்கள் ஆணையை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, மக்களின் எதிர்பார்ப்பை பாதிக்காத வகையில் செயற்படுமாறும் வலியுறுத்தினார். அரசாங்க சொத்துக்களை பயன்படுத்துவதில் முன்னைய மோசமான முன்னுதாரணங்களை ஒதுக்கி தரமான அரச சேவைக்கு தம்மை அர்ப்பணிக்குமாறு ஆளுநர்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இதன்போது வடக்கு கிழக்கு காணிகள் தொடர்பாகவும் மாகாண சபை நிதிப் பயன்பாடு தொடர்பிலும் ஆழமாக ஆராயப்பட்டது. கந்தளாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட காணி தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

## எமது பத்திரிகையின் பிரதம............

இந்த விருது விழாவில் வைத்தே இவருக்கான கௌரவம் வழங்கப்பட்டது.

பாடசாலை காலத்தில் இருந்தே ஊடகத்துறையில் பற்றுக் கொண்ட இவர் அக்காலத்திலிருந்தே பிரதேசத்தில் காணப்பட்ட குறைபாடுகளை கண்டறிந்து மக்களுக்கு முடியுமான தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் வீரகேசரி பத்திரிகையின் மக்கள் கடிதம் எனும் பகுதிக்கு எழுதத் தொடங்கினார். பின்னர் 2000 ஆம் ஆண்டு மட்டக்களப்பிலிருந்து வெளியிடப்பட்ட தினக்கதிர் பத்திரிகையின் பிராந்திய நிருபராக இணைந்து காத்திரமான செய்திகளை வழங்கியதன் மூலம் பிரதம ஆசிரியரின் நம்பிக்கைக்குரியவராக செயற்பட்டதுடன் பத்திரிகையின் வளர்ச்சிக்கு பாரிய பங்காற்றினார்.

2004 ஆம் ஆண்டில் தினகரன் தேசிய பத்திரிகையின் சென்றல்கேம்ப் குறூப் நிருபராக இணைந்து பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் மக்களின் தேவைகள் தொடர்பிலும் செய்திகளை வழங்கி பிரதேச செயலகத்தினால் கௌரவிக்கப்பட்டார்.

இதன் பின்னர் வீரகேசரி உட்பட பல்வேறு பத்திரிகைகளுக்கு பிராந்திய நிருபராக செயற்பட்டார்.

2018 ஆம் ஆண்டில் இலத்திரனியல் ஊடகத்துறையில் ஆர்வம் கொண்டு இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் அம்பாறை மாவட்ட செய்தியாளராக நியமனம் பெற்று பணியாற்றி வருகின்றார்.

அரச துறையில் பணியாற்றி வரும் இவர் பல்வேறு வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் தான் சார்ந்த சமூகத்திற்காக மெட்ரோ லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்து பத்திரிகையின் வளர்ச்சியில் பாரிய பங்களிப்பு செய்து வருகின்றார்.

கடந்த 24 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் பகுதி நேர ஊடகவியலாளராக பணியாற்றும் இவர் தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் ஒரு வருட இதழியல் டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்து சான்றிதழை பெற்றுக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் ஜே.எம்.பாஸித் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகரும், தொழிலதிபருமான புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீத், கலை கலாச்சார பீடாதி பேராசிரியர் எம்.எம். பாஸில், தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலர் உட்பட பிரமுகர்கள் பலரும் கௌரவ, விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

## பொதுத் தேர்தல் - 439 முறைப்பாடுகள் பதிவு!

பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இதுவரையில் 439 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 427 முறைப்பாடுகளும், 2 வன்முறைச் சம்பவங்களும், ஏனைய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 10 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 162 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 277 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

## சர்வதேச நாணய நிதிய..........

இடம்பெற்ற மக்கள் சந்திப்பில், கலந்துகொண்டு கருத்துரைத்த அவர், தற்போதைய அரசாங்கத்திற்குச் சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை மீளாய்வுக்குட்படுத்த முடியாமல் போயுள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கை தமது கடனை 2032ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் செலுத்த முடியும் என சர்வதேச நாணய நிதியம் வாய்ப்பளித்திருந்தது.

எனினும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் 2028 ஆம் ஆண்டிலிருந்து கடனை மீள செலுத்த முடியும் என தெரிவித்து, உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது.

இதனால் எமக்குக் கிடைக்கப்பெற்ற சலுகைக் காலத்தில் 4 வருடங்கள் இல்லாமல் போயின.
எனினும், அந்த காலப்பகுதிக்குள் மீண்டும் கடனை செலுத்தும் நடவடிக்கையை ஆரம்பிப்பதானால், நாட்டின் உற்பத்தியை உடனடியாக அதிகரிக்க வேண்டியது அவசியமாகும்.

அதற்கான எந்தவொரு முயற்சியையும் தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கவில்லை.

எனவே தமது அரசாங்கத்தில் சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையைத் திருத்தி, அதன் நன்மைகளை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

## பொதுத் தேர்தல் -130,0000...........

தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொதுத் தேர்தல் தொடர்பில் 401 முறைப்பாடுகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெரு முன்னாள் ஜனாதிபதிக்கு 20 வருட சிறைத்தண்டனை



பெரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதி அலெஜான்ட்ரோ டோலிடோவிற்கு (Alejandro Toledo) 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பெரு முன்னாள் ஜனாதிபதி அலெஜான்ட்ரோ டோலிடோ, பிரேசிலின் கட்டுமான நிறுவனமொன்றில் இலஞ்சம் வாங்கியதாக குற்றம் சாட்டப்பட்டு, 20 ஆண்டுகள் ஆறு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்ற 78 வயதான டோலிடோ, 2001 மற்றும் 2006 க்கு இடையில் ஆண்டிய நாட்டை ஆண்டவர்.
கட்டுமான நிறுவனத்திடம் இருந்து $35 மில்லியன் லஞ்சம் பெற்றதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுத் தேர்தல் தபால் வாக்களிப்பு விண்ணப்பங்கள் அதிகரிப்பு




கடந்த ஜனாதிபதி தேர்தலை விட எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் இத்தேர்தலில் 25,731 தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் அதிகரித்துள்ளன.

இதேவேளை. பொதுத் தேர்தலுக்காக 738,050 தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களில் அதிகளவான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

21 ஆயிரத்து 160 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.ஏ.எம்.எல். ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இம்மாதம் 23ஆம் திகதி தபால் மூல வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளதுடன், உத்தியோகபூர்வ வாக்கு அட்டைகள் விநியோகிக்கப்பதற்கு இம்மாதம் 26ஆம் திகதி திட்டமிடப்பட்டுள்ளது.

EAST லீடர்

# கறவை மாடுகளின் பால் கூட எம்மை தாண்டி கொழும்பை செல்கின்றது

(கஜானா, பாறுக் ஷிஹான்)

கறவை மாடுகளின் பால் கூட எம்மை தாண்டி கொழும்பை செல்கின்றது.எனவே பொருளாதாரத்தை மேம்படுத்த ஓர் உண்மையான தலைமைத்துவம் எமக்கு வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர் வெள்ளையன் வினோகாந் தெரிவித்தார்.

அம்பாறை ஊடக அமையத்தில் விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது,

இந்த பாராளுமன்ற தேர்தலானது அனைத்து கட்சிகளுக்கும் சவாலான தேர்தலாக அமைந்திருக்கின்றது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் தங்களின் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் முகமாக ஒரு கட்சியை ஆதரித்திருந்தார்கள். ஆனால் அவர்கள் ஆதரித்த கட்சியானது இன்று ஏட்டுச்சுரக்காய் போன்று



இருப்பதை எம்மால் உணர முடிகின்றது. இந்த நாட்டில் அனைத்து மக்களும் வாழ வேண்டும். கல்வி சுகாதாரத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

## சிறந்த ஊடகவியலாளர் விருதுகள்







(தில்சாத் பர்வீஸ், ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

இலங்கையில் கலை, இலக்கியம், ஊடகத்துறை, சமூகப்பணி என்பவற்றில் சாதனை படைத்த பல்துறை ஆளுமைகளைக் கௌரவிக்கும் ஸ்கை தமிழ் ஊடக அமைப்பின் விருதுகள் வழங்கி கௌரவிக்கும் விழா கடந்த சனிக்கிழமை(19) தென்கிழக்கு பல்கலைக்கழக தொழிநுட்ப பீட அரங்கில் ஸ்கை தமிழ், துணிந்தெழு பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித் தலைமையில் இடம்பெற்றது. இலங்கை ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை தமிழ் விருது -2024 நிகழ்வில் ஊடகத்துறையில் சுமார் 15 வருடங்களாக ஊடகப் பணியாற்றிவரும் இரண்டு ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அதில் சிறந்த பிராந்திய நிருபராக செய்தியாளர் நூருல் ஹுதா உமரும், புலனாய்வு அறிக்கையிடலுக்காக செய்தியாளர் பாறூக் ஷிஹானும் விருதுகளை பெற்றுக் கொண்டனர்.

## சம்மாந்துறையில் மார்பகப் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு

(தில்சாத் பர்வீஸ்)

இலங்கையில் மிகவும் தீவிரமான நோயாகக் காணப்படுகின்ற மார்பகப் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு ஊர்வலம் சம்மாந்துறையில் நடைபெற்றது.

சம்மாந்துறை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் மார்பக புற்றுநோய் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சஹிலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஊர்வலத்தில் பங்கேற்றார்.

சம்மாந்துறை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் முன்னால் ஆரம்பமான இந்த ஊர்வலம் சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகம் வரை சென்று பின்னர் அங்கிருந்து சம்மாந்துறை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் முன்னால் நிறைவடைந்தது.

இதில் வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள், சுகாதார விழிப்புணர்வு கழகங்கள் என்பன கலந்து கொண்டன.

## தோப்பூர் ஷாக்கிர் கிலுறுதீன் எழுதிய "மழைச்சாரல் தொடர்கிறது" கவிதை நூல் வெளியீடு



(நூருல் ஹுதா உமர்)


தோப்பூர் ஷாக்கிர் கிலுறுதீன் எழுதிய "மழைச்சாரல் தொடர்கிறது" கவிதை நூலானது கடந்த ஞாயிற்றுக்கிழமை தோப்பூர், பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் தோப்பூர் கலை இலக்கியப் பேரவையின் அனுசரணையோடு விமர்சையாக நடைபெற்றது.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், முன்னாள் பீடாதிபதியுமான எம்.எல்.பௌசுல் அமீர் தலைமையில் இடம்பெற்ற இந் நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம அதிதியாக ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் பீ.ஹாஜா முகைதீன் கலந்து கொண்டு முதல் பிரதியை பிரபல தொழிலதிபரும், அல் - மஸ்ஜிதுல் பலாஹ் ஜும்ஆ பள்ளிவாசலின் தலைவருமான எஸ்.எச்.ஜெஸாஹீர் வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மூத்த கல்விமான்கள், புத்திஜீவிகள், உலமாக்கள், கலை இலக்கியப் பேரவை உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், இலக்கியவாதிகள், நலன்விரும்பிகள், ஊர் பிரமுகர்கள், நூலாசிரியரின் நண்பர்கள் மற்றும் நளீமிய்யா நண்பர்கள் போன்ற பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

ஜாமிஆ நளீமிய்யாவின் பட்டதாரியான ஷாக்கிர் கிலுறுதீன் எழுதிய இந்நூலானது தோப்பூர் கலை இலக்கியப் பேரவையின் மூன்றாவது வெளியீடு என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஊடக மைய பிரதிநிதிகளை சந்தித்த முன்னாள் தேர்தல் ஆணையாளர்



(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை ஊடக மையத்தின் பிரதிநிதிகளை முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய சம்மாந்துறை கலாச்சார மண்டபத்தில் சந்தித்தார். இந்நிகழ்வில் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தல்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதோடு தேர்தல் தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு விஷேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை ஊடக மையத்தின் சிரேஷ்ட ஆலோசகர் காமில் இம்டாட் உட்பட நிறுவனத்தின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

# ZPL SEASON - III ஊடக மாநாடு

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

கல்முனை ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாநாடு (20) கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இவ் ஊடக மாநாட்டில் ZPL கிரிக்கெட் சுற்றுப்போட்டி தொடர்பாக சில முடிவுகள் எட்டப்பட்டதாக அதன் தலைவர் அதிபர் எம்.ஐ.ஜாபீர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அதன் அடிப்படையில்...
ZPL கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 25,26,27 ஆம் திகதிகளில் பகல், இரவு போட்டிகளாக நடைபெறும் என்றும் இச்சுற்றுப்போட்டியில் 32 அணிகள் பங்குபற்றுகின்றன எனவும், பாடசாலைக்கான பஸ் கொள்வனவுக்கு நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு முடியுமானவர்கள் தனியாகவோ, குழுக்களாகவோ நிதியுதவி வழங்க முடியும். அவ் நிதியானது முற்று முழுதாக பஸ் கொள்வனவுக்கு மாத்திரமே பயன் படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் Zahirian Walk நிகழ்வுக்கு பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் சகலரும் கலந்து கொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் Zahirian Walk நிகழ்வுக்கு வெளியிடப்படவுள்ள T- Shirts இனை பாடசாலையின் பழைய மாணவர்கள் சகலரும் கொள்வனவு செய்து



பாடசாலையின் அபிவிருத்திற்கு பங்களிப்பு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இந் நிகழ்வில் பாடசாலை பஸ் கொள்வனவுக்காக Zahirian's 90's Batch பிரிவினர் ரூபா 5 லட்சம் நிதியினை இதன்போது கையளித்தனர்.
இந்நிதியினை வைத்தியர் சனூஸ் காரியப்பர் மற்றும் இலங்கை வங்கி முகாமையாளர் முஸ்தகீம் மௌலானா ஆகியோர் கையளித்திருந்தனர்.

பஸ் கொள்வனவின் ஊடாக மாணவர்களின் கல்விச் சுற்றுலா மற்றும் வெளிக்களப் பயணங்களை மேற்கொள்ள முடியும் எனவும் அதன் ஊடாக பெற்றுக் கொள்ளப்படும் பணம் மாணவர்களின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அண்மையில் மரணித்த சிரேஷ்ட ஊடகவியலாளர் அஸ்ஹர் இப்றாஹிமை நினைவுகூர்ந்து பிரார்த்தித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.








# வேட்பாளர் றிஸ்லி முஸ்தபாவை ஆதரித்து அம்பாறையில் கருத்தரங்குகள்

(பாறுக் ஷிஹான்)



எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் பாராளுமன்ற தேர்தல் வேட்பாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளர் றிஸ்லி முஸ்தபாவை ஆதரித்து ஆண், பெண்களுக்கான தெளிவூட்டல் கருத்தரங்கு அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, இறக்காமம், நற்பிட்டிமுனை, பகுதிகளில் பிரச்சார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன் போது நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு சந்திகள், கல்முனை சந்தை நகர வர்த்தக நிலையங்களுக்கு சென்ற பாராளுமன்ற தேர்தல் வேட்பாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளர் றிஸ்லி முஸ்தபா தனக்கு ஆதரவினை வழங்குமாறு பொதுமக்கள் வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அரசியல்வாதிகள் பாராளுமன்ற உறுப்பினர்களாக அமைச்சர்களாக மக்களின் வாக்கு பலத்தால் தெரிவுசெய்யபட்ட பின்னர் தங்களின் கடமைகளை நேர்மையாகச் செய்வதில்லை. இந்த பிழையான போக்கை மாற்ற என்னால் முடிந்தளவு போராடுவதுடன் பாராளுமன்ற உறுப்பினர் பதவி, மற்றும் அமைச்சர் பதவிகளுக்கான வரப்பிரசாத வாய்ப்புக்களை முழுவதுமாக பெற்றுக்கொண்டு, தாம் சார்ந்த சமூகத்தினுடைய பிரச்சனைகள் என்னவென்று அறிந்திருந்தும், அவற்றுக்குரிய தீர்வினைக் காண எந்தவித ஆக்கபூர்வ நடவடிக்கையும் எடுக்காததன் விளைவுதான் இன்று நான் இத்தேர்தலில் போட்டியிட காரணம் என றிஸ்லி முஸ்தபா தெரிவித்தார்.

**2024 பொதுத் தேர்தலில்**
**இம்முறை போட்டியிடும் உங்களின்**
**அல்லது உங்கள் கட்சியின் விளம்பரங்கள்**
**துண்டு பிரசுரங்கள் சஞ்சிகைகள்**
**மற்றும் சுவரொட்டிகளை எமது**
**பத்திரிகையின் ஊடாக தெரியப்படுத்தி**
**உங்களைப் பற்றி நாட்டுக்கு**
**எடுத்துக் கூற நாம் தயார்.**

**கூடுதலாக மக்கள் ஆதரவினை பெற**
**நியாயமான கட்டணத்தில் விளம்பரங்களை**
**பிரசுரிக்க தொடர்பு கொள்ளவும்**
**0779007738, 0772539298**

# சிறந்த ஊடகவியலாளர் விருது செய்தியாளர் ஸாகிருக்கு

சாதனை படைத்த பல்துறை இலங்கை ஆளுமைகளுக்கு ஸ்கை தமிழ் விருது வழங்கிக் கௌரவிக்கும் விழாவில், ஊடகத்துறையில் 15 வருடங்களுக்கு மேற்பட்ட சேவையைக் கௌரவிக்கும் முகமாக எமது பத்திரிகையின் செய்தி ஆசிரியரும் பல்துறைக்கலைஞருமான ஊடகவியலாளர், எம்.எஸ்.எம்.ஸாகிர் சிறந்த செய்தியாளருக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.



நவமணி பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தில் ஊடகவியலாளராக சுமார் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலங்கள் பணிபுரிந்த இவர், தற்போது தமிழன், தினகரன், விடிவெள்ளி, தமிழ் மிரர், ஒருவன் ஆகிய பத்திரிகைகளில் பிராந்திய செய்தியாளராகவும் மெட்ரோ லீடர் பத்திரிகையில் செய்தி ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறார். ஸ்கை தமிழ் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன ஆலோசகர், இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் மற்றும் தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் ஆகியோர் இணைந்து இவ்விருதை வழங்கி வைத்தனர்.

# சிறுபான்மை மக்களை ஏமாற்றும் அரசியல் கலாசாரத்திற்கு இம்முறை முற்றுப்புள்ளி

**(எம்.எச்.எம்.சியாஜ்)**

தேர்தல் காலங்களில் புத்தளம் மாவட்ட சிறுபான்மை மக்களை ஏமாற்றி, அவர்களிடமிருந்து வாக்குகளைப் பெற்றுகொண்ட பின் அவர்களை கைவிடுகின்ற பெரும்பான்மைக் கட்சிகளின் அரசியல் கலாசாரத்திற்கு இந்த முறை முற்றுப்புள்ளி வைப்போம் என ஐக்கிய ஜனநாயக குரல் கட்சியின் புத்தளம் மாவட்ட தலைமை வேட்பாளரான வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆப்தீன் எஹியா தெரிவித்தார்.

இதுதொடர்பில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், பொரும்பான்மை கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டால் சிறுபான்மை பிரிதிநிதியொருவர் வெற்றிபெற முடியாது என்பதை கடந்த கால வரலாறுகள் மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கின்றன. இம்முறையும் சிறுபான்மைக் கட்சிகளை இணைத்துக்கொண்டு பெரும்பான்மைக் கட்சிகள் களத்தில் இறங்கியுள்ளன. இதனால், புத்தளம் மக்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. எமது மொத்த வாக்குகளையும் அவர்கள்தான் அள்ளிக்கொண்டு பாராளுமன்றத்திற்கு செல்லப் போகிறார்கள்.

இந்த சூழ்நிலையில்தான் பெரும்பான்மையினரின் திட்டங்களை தவிடுபொடியாக்கி, புத்தளம் மாவட்ட சிறுபான்மை மக்கள் சார்பில் ஒன்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களை ஐக்கிய ஜனநாயக குரல் கட்சி ஊடாக பெற்றுக்கொள்ள நாம் ஒரு பலமான அணியுடன் களமிறங்கியிருக்கிறோம். மக்களின் நம்பிக்கையை எமது கட்சி எப்போதும் பாதுகாக்கும் என்பதில் சந்தேகமில்லை என்றார்.

# சம்மாந்துறையில் கைக்குண்டு மீட்பு



**(தில்சாத் பர்வீஸ்)**

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சம்மாந்துறை பசார் 7ஆம் வீதியில் உள்ள வீடு ஒன்றில் (21) கட்டட வேலைக்காக மண்ணை பயன்படுத்தும் போதே குறித்த கைக்குண்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கட்டட நிர்மாண பணியில் ஈடுபட்டவர்களில் கைக்குண்டுடை கண்டதாக கூறப்படும் நபர் உடனடியாக 119 எனும் பொலிஸ் அவசர பிரிவுக்கு தகவல் வழங்கியதை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த சம்மாந்துறை பொலிஸார் கைக்குண்டை பார்வையிட்டதுடன், கைக்குண்டை அவ்விடத்தில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பாக குண்டு செயலிழக்கும் விசேட அதிரடி படையினர் மற்றும் குற்றவியல் தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்

இச் சம்பவம் தொடர்பாக சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற கட்டளையை பெற்று கைக்குண்டை அவ்விடத்தில் இருந்து அகற்றி செயலிழப்பு செய்வதற்கு பொ-லிஸார் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிசார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொள்ளை சம்பவம் தொடர்பில் கணவனும் மனைவியும் கைது

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி பிரதேசத்தில் இடம்பெற்ற கொள்ளை சம்பவம் தொடர்பில் கணவனும் மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்லடி திருச்செந்தூரில் அமைந்துள்ள தனது வீட்டைப் பூட்டிவிட்டு பிறந்தநாள் விழா ஒன்றிற்குச் சென்று விட்டு, மீண்டும் வீட்டை திறந்து பார்த்தபோது குறித்த கொள்ளை சம்பவம் இடம்பெற்றிருப்பது தெரியவந்துள்ளது

# டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுப்பு

**(நூருல் "ஹுதா உமர்)**

கல்முனை கல்வி வலய கல்முனை அல்- அஸ்ஹர் வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் எம்.ஏ.அக்பர் அலி தலைமையில் பிரதேச பொது சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமும் சுற்றுப்புறச் சூழலை சுத்தப்படுத்தலும் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய பணிமனையின் நுளம்பியல் ஆய்வு குழுவின் ஆய்வின் படி டெங்கு நுளம்பு அதிகம் பரவும் அபாயம் காணப்படுகின்ற இடங்களில் இந்த வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் டெங்கு நுளம்புகள் காணப்படக்கூடிய இடங்கள், பொருட்கள் என்பன அடையாளம் காணப்பட்டு அழிக்கப்பட்டதுடன் மாணவர்களுக்கு ஆரோக்கியமான பாடசாலை சூழல் ஏற்படுத்தப்பட்டது.

இந்த நடவடிக்கையில் கல்முனை பொது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பாடசாலை ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# முஸ்லிம் காங்கிரஸ் பிரபுத்துவ மேட்டுக்குடி கட்சியாக செயற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது

**(நூருல் ஹுதா உமர்)**

முஸ்லிம் காங்கிரஸ் பிரபுத்துவ மேட்டுக்குடி தன்மையில் செயல்படுவதை ஏற்றுக்கொள்ள முடியுமா? யாரோ ஒருவன் தட்டிக் கேட்க வேண்டாமா? இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி ஹரீஸ் தெரிவித்தார்.

இதன்போது ரவூப் ஹக்கீம் அவர்கள் தன்னை வேட்பாளர் பட்டியலில் ஒப்பம் இடுவதற்கு தந்த வாக்குறுதிகள், புனானையிலுள்ள பல்கலைக்கழகத்திற்கு நடுநிசியில் அழைத்து "அவர்கள் ஒன்றுக்கும் ஒத்து வருகிறார்களில்லை" என்று தெரிவித்து ஏமாற்றியது என பல்வேறு வி'யங்களை மக்களுக்கு முன் மொழிந்த அவர் மேலும்"ஒன்றரை வருடமாக உங்களின் நடவடிக்கைகள் எனக்கு பிடிக்கவில்லை" என்றும் கூறினார். இவரின் இந்த பேச்சு தான் எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது என்றார்.

இக்கூட்டத்தில் ஹரீஸ் மேலும் தெரிவிக்கையில், கல்முனை மாநகர சபையில் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் 10 பேர் இருந்த நிலையில் அதாஉல்லாவிடம் பேசி சாய்ந்தமருது உறுப்பினர்களின் ஆதரவு பெற்று ரஹ்மத் மன்சூரை பிரதி மேயராக்கி அழகு பார்த்தேன். அவர் நயவஞ்சகத்துடன் செயல்படும் அக்கரைப்பற்று தவத்துடன் கூட்டுச் சேர்ந்தது செயல்படுவதுதான் மகா பிழை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் என்னை தொலைபேசியில் அழைத்து "மந்திரித்துமா நீங்கள் எங்களோடு வாருங்கள் உங்களை தேசிய பட்டியலில் அல்லது வேட்பாளர் பட்டியலில் போடுகிறோம் " எனக் கூறி அழைப்பு விடுத்தார் . அவரின் அழைப்பை நான் ஏற்றிருந்தால் இந்த மக்களின் ஆதரவுடன் நான் நாடாளுமன்றம் செல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். இருந்தும் நான் அதற்கு ஆசைப்பட வில்லை.

கடந்த காலங்களில் 20ம் திருத்தத்தை ஆதரித்தமை, ஜனாஸா எரிப்பை நிறுத்த செய்த முயற்சிகள் பற்றி மனம்திறந்து பேசினார். இம்முறை இடம்பெறும் பொதுத்தேர்தலில் தனக்கு ரவூப் ஹக்கீம் அவர்களினால் செய்த கழுத்தறுப்புக்கள், சிராஸ் மீராசாஹிப், தவம், ரஹ்மத் மன்சூர், உதுமாலெப்பை போன்றோர்கள் செய்த துரோகம், கட்சி செயலாளர் நிஸாம் காரியப்பரின் இரட்டை நாடகங்கள், குழிபறிப்புக்கள் தொடர்பிலும் உரையாற்றிய அவர் கல்முனை உப பிரதேச செயலக விவகாரத்தில் தனது பங்களிப்பை மக்களுக்கு எத்திவைத்தார்.

இந்த "வஞ்சிக்கப்பட்டவனின் குரல்" மேடையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுத் தேர்தல் வேட்பாளராக இருக்கும் ஏ.ஆர். அமீர் கலந்து கொண்டு ஹரீஸ் அவர்களுக்கு சார்பாகவும், அவருக்கு நடந்த அநீதிக்கு எதிராகவும் உரையாற்றினார். இங்கு கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் ஏ.எம். றகீப், முன்னாள் பிரதி முதல்வர் ஏ.ஏ. வஸீர், இறக்காமம் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஜெமீல் காரியாப்பர், அட்டாளைசேனை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஏ.எல். அமானுல்லா, பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர்கள், மத்தியகுழு உறுப்பினர்கள், பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டதுடன் பெருந்திரளான பொதுமக்களும் பங்கேற்றிருந்தனர்.

# மட்டு. மாவட்ட பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களுக்கு ஒருநாள் செயலமர்வு








**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒருநாள் செயலமர்வு புத்தசாசன மத விவகார கலாசார அமைச்சின் ஆலோசனைக்கு அமைய, முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ். எம்.நவாஸின் வழிகாட்டலின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களில் கடந்த 17,18,19 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுமார் 150 பள்ளிவாசல்களில் இருந்து 450 க்கும் மேற்பட்ட நம்பிக்கையாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இந்த கருத்தரங்கில் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள், பள்ளிவாசல் எவ்வாறு ஒரு சமூக மையமாக செயற்படுவது, இலங்கை வக்பு சபை மற்றும் இலங்கை வக்பு நியாய சபை ஆகியன தொடர்பில் நம்பிக்கையாளர்களுக்கு தெளிவூட்டப்பட்டன. இக் கருத்தரங்கில் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் சார்பாக வளவாளர்களாக அதன் உதவிப் பணிப்பாளர் எம்.எஸ்.அலா அஹ்மத், வக்பு பிரிவின் அதிகாரி எம்.ஐ.முனீர், வக்பு பிரிவின் பொறுப்பதிகாரி ஏ.எஸ். எம். ஜாவித், வக்பு நியாய சபை பதில் செயலாளர் எம்.என்.எம். ரோஸன் ஆகியோரும் மேலும் சிறப்பு வளவாளர்களாக ரிஸ்வி மஜீதி மற்றும் அஷ்ஷேக் நுஸ்ரி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம் எஸ்.எம்.சபீசுக்கு ஆதரவு




இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம் அதனோடு இணைந்த 4 ஆசிரியர் சங்கங்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய இலங்கை ஜனநாயக முன்னணி திகாமடுல்ல மாவட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேட்பாளர் எஸ்.எம்.சபீசுக்கு எதிர்வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் ஆதரவு வழங்கி அவரை வெற்றி பெற வைக்க தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அது தொடர்பான கலந்துரையாடல் தனியார் விடுதியில் நடைபெற்றது. இதன்போது கருத்து தெரிவித்த அக்கட்சியின் தலைவர் ஓய்வு பெற்ற அதிபர் ஏ.பி. கமால்தீன், எங்கள் தொழிற்சங்கம் உருவாக்கிய கட்சி நாட்டின் பலபகுதிகளில் இத்தேர்தலில் போட்டியிடுகின்றது. அம்பாறை மாவட்டத்தில் சிறு தவறு காரணமாக எங்களது வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. அதனால் தொடர்ச்சியாக கல்விப்புரட்சிக்காவும், மக்களின் உன்னதமான வாழ்வை மேம்படுத்துவதற்காகவும் அயராது பாடுபடும் சபீசின் செயல்பாடுகளை கடந்த 2 வருடமாக பார்த்துக் கொண்டு வருகிறோம் என்றார்.

# கிண்ணியாவில் முச்சக்கர வண்டி தீப்பிடித்து நாசம்



திருகோணமலை மட்டக்களப்பு வீதியில் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டி திடிரென தீப்பிடித்து எரிந்து முற்றாக சேதமடைந்துள்ளது.

குறித்த சம்பவம் கிண்ணியா பகுதியில் இடம்பெற்றுள்ளது. மூதூரில் இருந்து கிண்ணியாவுக்குச் சென்ற முச்சக்கர வண்டியே இவ்வாறு தீப்பற்றி எரிந்துள்ளது. குறித்த சம்பவத்தில் முச்சக்கர வண்டி சாரதி, முச்சக்கர வண்டியை விட்டு இறங்கி உயிர் தப்பியுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மாளிகா இளைஞர்கள் சிராஸ் மீராசாஹிபுக்கு ஆதரவு வழங்க தீர்மானம்



மாளிகா மனிதநேய உதவியாளர் அமைப்பு ஏற்பாடு செய்த இளைஞர்களுடனான சந்திப்பு அதன் தலைவர் என்.எம்.ரிபின் தலைமையில் (21) இடம்பெற்றது.

மாளிகைக்காடு பிரதேசத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் திகாமடுல்ல வேட்பாளர் கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் கலந்து கொண்டு அவரின் எதிர்கால திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

இதில் கலந்துகொண்ட இளைஞர்கள் தங்களின் முழுமையான ஆதரவை சிராஸ் மீராசாஹிபுக்கு வழங்குவதாக தெரிவித்தனர்.